2015 செப்டம்பர் 4]

குறிப்பிட்டிருக்கக்கூடிய அனைத்துப் பள்ளிகளையும் தெரிவு செய்து, அவற்றின் அனைத்துத் தேவைகளையும் ஆய்வு செய்து, மாவட்ட அமைச்சர் அவர்களின் ஆலோசனையைப் பெற்று, துறையின்மூலம் ஆய்வு செய்து, அந்தப் பள்ளிகளுக்குத் தேவையான கட்டட வசதி, சுற்றுச் சுவர் வசதி மற்றும் இதர வசதிகளையும் பூர்த்தி செய்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்களது அரசு முன்வரும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 240, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.கோ. ரமேஷ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

240—

மருத்துவமனையைத் தரம் உயர்த்துதல்

***5411—திரு. கா.கோ. ரமேஷ்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் அரசு பொது மருத்துவமனையை மாவட்டத் தலைமை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தவும், கூடுதல் மருத்துவர்களை நியமிக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை பணிவோடு வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு 29 மருத்துவர் பணியிடங்கள் மற்றும் 41 செவிலியர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. அனைத்து மருத்துவம் மற்றும் மருத்துவம்சாரா இதர பணியாளர்களின் பணியிடங்களும் நிரப்பப்பட்டு, மிகச் சிறப்பாகச் செயல்பட்டுவருகிற மருத்துவமனையாகும் இது. ஒரு மாவட்டத்திற்கு ஒரு மாவட்டத்

[2015 செப்டம்பர் 4

தலைமை மருத்துவமனை மட்டுமே அனுமதிக்கப்படுகிறது. வேலூர் மாவட்டத்திலே, வாலாஜா மருத்துவமனை மாவட்டத் தலைமை மருத்துவமனையாக, நல்ல முறையில் செயல்பட்டு வருகிறதென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.கோ. ரமேஷ் அவர்கள்.*

திரு. கா.கோ. ரமேஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்றுநீராய் ஆயிரம் தலைவர்கள் வந்தாலும், ஊற்றுநீராய் வந்து உலகத் தமிழர்களுக்கெல்லாம் வாழ்வளிக்கும் உழைப்பின் சிகரமே! (மேசையைத் தட்டும் ஒலி) உன்னதத் தலைவியே! நான் வணங்கும் தெய்வம், மாண்புமிகு அம்மா அவர்களே! இந்திய தேசமே வியந்து நிற்கும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கட்டிக் காத்திட, காயங்கள் சுமந்து, கண்ணீர்த் துளிகளால் வளர்த்து, தொண்டர்களின் குருதியெல்லாம் உணர்வுகளால் நிரம்பித் ததும்ப, உழைத்து உழைத்து, தன் நலத்தைக் கருதாமல், தமிழர் நலன் ஒன்றையே தலைமைக் கடமையாய், நாடே வணங்கிடும் நற்றமிழ் அரசியே! (மேசையைத் தட்டும் ஒலி) நல்ல தமிழ் சொல்லாட்சியே! நக்கீர சிந்தனையே! ஈடில்லாமல் மணந்து நிற்கும் அம்மா உணவகம் தந்த மணிமேகலையே! பாரெல்லாம் போற்றுகின்ற பாரதத்தின் புகழ் அரசியே! பண்பாளர், படைப்பாளர், உழைப்பாளர், நெஞ்சமெல்லாம் இருக்கின்ற எங்கள் குல தெய்வமே! நித்தம் நித்தம் நான் வணங்கும் எங்கள் அன்னையே! தங்கள் பொற்பாதங்களை வணங்குகிறேன்.*

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அரசு பொது மருத்துவமனையில் சராசரியாக நாளொன்றுக்கு 2,600-க்கும் அதிகமான புறநோயாளிகளும், 250 உள்நோயாளிகளும் சிகிச்சை பெறுகின்றனர். நாளொன்றுக்கு சராசரியாக 20 பிரசவங்களும் 15 அறுவை சிகிச்சைகளும் நடைபெறுகின்றன. மேலும், பச்சிளம் குழந்தைகள் சிறப்பு பராமரிப்புத் துறையின்மூலமும் மக்கள் பயன் பெறுகின்றனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, மக்களின் நலன் காக்கும் அரசு

2015 செப்டம்பர் 4]

என்பதற்குச் சான்றாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்மூலம் இன்றைய நாள்வரை, திருப்பத்தூர் அரசு பொது மருத்துவமனையில் 2,620 நோயாளிகள் மொத்தமாகப் பயனடைந்துள்ளனர். இதில், 840 பச்சிளம் குழந்தைகள் மட்டும் இந்தக் காப்பீட்டுத் திட்டத்தின்மூலம் பயனடைந்து சாதனை படைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-10

மக்களாட்சி நடத்துகின்ற மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே திருப்பத்தூர் அரசு மருத்துவமனை, இந்த 4½ ஆண்டு காலத்தில் 5 கோடியே 20 இலட்சம் ரூபாய் அளவிற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய 'மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்'மூலம் வருவாய் ஈட்டியிருக்கின்றது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியிலே இவ்வளவு சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற இந்த மருத்துவமனைக்குப் போதிய செவிலியர்கள், மருத்துவர்கள் இல்லாத நிலை இருக்கிறது. திருப்பத்தூர் தொகுதியிலிருந்து உயர் சிகிச்சை பெற வேண்டுமென்றால், ஏறக்குறைய 140 கிலோ மீட்டம் தூரம் வரை பயணம் செய்து, வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குச் செல்ல வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.கோ. ரமேஷ், கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. கா.கோ. ரமேஷ்: மேலும், திருப்பத்தூர் பொது மருத்துவமனையில் 10 மருத்துவர்கள், 15 செவிலியர்கள் நியமிக்கவும், தனியாக இரத்த வங்கி, அவசர சிகிச்சைப் பிரிவு, தலை சிகிச்சைக்கென தனியாக ஒரு கட்டடம் கட்டித் தரவும் ஆவன செய்யுமாறு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதம் பணிந்து வணங்கி கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியிலே

மட்டும்தான் மருத்துவமனைகளைத் தரமுயர்த்துகின்ற திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்திற்கு வித்திட்டவரே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பாக, ஆரம்ப சுகாதார நிலையங்களை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைகளாகத் தரமுயர்த்துகின்ற பணி, non-taluk hospital அல்லது PHC என்று சொல்லக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையங்களை அவை தாலுகாவாகிவிட்டால் அந்த மருத்துவமனையைத் தாலுகா மருத்துவமனையாகத் தரமுயர்த்துகின்ற பணி, மருத்துவக் கல்லூரிகள் இல்லாத மாவட்டங்களிலே மாவட்டத் தலைமை மருத்துவமனையை மருத்துவக் கல்லூரிக்கு இணையான மருத்துவமனையாக மாற்றுகின்ற பணி என இந்த மூன்று பணிகளும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் மட்டும்தான் மிகச் சிறப்பாகச் செய்து முடிக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற திருப்பத்தூர் அரசு பொது மருத்துவமனை இன்றைக்கு மாவட்டத் தலைமை மருத்துவமனைக்கு நிகராக இருக்கிறது. ஒரு மாவட்டத் தலைமை மருத்துவமனையில் என்னென்ன வசதிகளெல்லாம் இருக்குமோ, CT Scan வசதி, Digital X-ray வசதி, 24 மணி நேரமும் செயல்படக்கூடிய CEmONC Centre, NICU Centre, Blood Bank, NCD wing, Siddha wing, Dental wing என அனைத்து வசதிகளும் இங்கே இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கக்கூடிய வசதிகள் அனைத்தும் நோயாளிகளின் தேவைக்கேற்ப வழங்க மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, பெரியார் நகரில் உள்ள புறநகர் மருத்துவமனையைச் சுற்றி பல இலட்சக்கணக்கான மக்கள் வாழ்கிறார்கள். ஸ்டான்லி மருத்துவமனை, இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனை போன்றவற்றிலே நெரிசல் அதிகமாக இருக்கிறது. அக

2015 செப்டம்பர் 4]

நோயாளிகளின் கூட்டமும் அதிகமாக இருக்கிறது. அங்கே நெரிசலைக் குறைப்பதற்காக, பெரியார் நகர் மருத்துவமனையை நாம் சிறப்படையச் செய்ய வேண்டியிருக்கிறது. ஏற்கெனவே அதன் கட்டுப்பாட்டை D.M.S.-லிருந்து D.M.E.-க்கு கொண்டுவர வேண்டுமென்று நான் வைத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்டமைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மருத்துவமனையில் எலும்பு முறிவுப் பிரிவு, குழந்தைகள் பிரிவு, குடல் இரைப்பைப் பிரிவு, நெஞ்சகப் பிரிவு போன்றவற்றில் சிறப்பு மருத்துவர்களை நியமிப்பதோடு, இராஜிவ் காந்தி அரசு பொது மருத்துவமனையின் House Surgeon-களை சுழற்சி முறையில் 24 மணி நேரமும் பயன்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரில் வைத்த கோரிக்கையை ஏற்றுதான் D.M.E.-மருத்துவக் கல்வி இயக்ககத்தின்கீழ் அம்மருத்துவமனை கொண்டு வரப்பட்டு, அரசாணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய இந்தச் சிறப்பு மருத்துவர்கள் மருத்துவக் கல்வி இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழே வருகின்ற காரணத்தினாலே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான அனுமதியைப் பெற்று படிப்படியாக நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் பல்வேறு ஊர்களிலிருந்தும் பழனிக்கு தைப்பூசம், பங்குனி உத்திரம் போன்ற சமயங்களில் பல இலட்சக்கணக்கான பக்தர்கள் வந்து செல்கின்றனர். அங்கிருக்கின்ற அரசு மருத்துவமனைக் கட்டடங்கள் மிகவும் பழமை வாய்ந்து, சிதிலமடைந்த கட்டடங்களாக இருக்கின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தச் சேதமடைந்த கட்டடங்களுக்குப்

பதிலாக புதிய கட்டடங்கள் கட்டி, அங்கே போதுமான மருத்துவர்களை நியமித்து, வேண்டிய வசதிகளை ஏற்படுத்தித் தருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய கட்டடங்கள் கட்டுகின்ற பணி படிப்படியாக நடந்து வருகிறது. தேவைக்கேற்ப, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மருத்துவர்கள் நியமனம் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம்மூலம், அதாவது* M.S.R.B. *என்று சொல்லக்கூடிய* Medical Services Recruitment Board *இன்றைக்கு உருவாக்கப்பட்டு, அதன்மூலம் இதுவரை 5,056 புதிய மருத்துவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இப்பொழுதும் தொடர்ந்து மருத்துவர்களை நியமிக்கும் பணி நடைபெற்று வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.வ. மார்க்கண்டேயன் அவர்கள்.*

முற்பகல் 11-15

திரு. கு.வ. மார்க்கண்டேயன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வரலாற்றில் இளைஞர்களுக்கான ஒரே இலட்சியத் தலைவர், உலக வரலாற்றினுடைய தைரிய லட்சுமி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதியில், விளாத்திகுளத்தில் அரசு தாலுகா மருத்துவமனை அமைந்திருக்கின்றது. அந்த மருத்துவமனையில் ஐந்து மருத்துவர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கடந்த கால ஆட்சியில், அங்கு ஐந்து மருத்துவர்களுமே பணியாற்றினார்கள். இப்போது அந்த

2015 செப்டம்பர் 4]

மருத்துவமனையிலுள்ள மருத்துவர்கள் P.G. படித்தவர்கள் ஆவர். மேற்படிப்பு படித்த மருத்துவர்கள்தான் அந்த மருத்துவமனையில் பணியாற்ற முடியும் என்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. மிகவும் பின்தங்கிய பகுதியாக, கரிசல்காட்டுப் பகுதியாக, ஓரத்தில் இருக்கக்கூடிய ஒரு பகுதியாக அந்தப் பகுதி இருப்பதால், P.G. படித்த மருத்துவர்களை அரசாங்கம் அங்கே நியமித்தாலும்கூட, அங்கே யாரும் இதுவரை தொடர்ந்து பணியாற்றுவதில்லை. இரண்டு, மூன்று முறை நேரடியாகத் தெரிவித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்காக நடவடிக்கை எடுத்தும்கூட, அங்கே மருத்துவர்கள் யாரும் வந்து பணியில் சேருவதற்குத் தயாராக இல்லை. ஆதலால், அங்கே பணியாற்றுவதற்கான அந்த P.G. தகுதியைக் குறைத்தால் நன்றாக இருக்கும். ஏனென்றால், நூற்றுக்கும் மேற்பட்ட கிராமப் பகுதி மக்கள் அந்த மருத்துவமனைக்கு வைத்தியம் பார்ப்பதற்காக வருகிறார்கள். பெரிய நோய்களுக்குச் சிகிச்சை அளிக்க தூத்துக்குடி, கோவில்பட்டி, அருப்புக்கோட்டை, மதுரை போன்ற பெருநகரங்களில் வசதி இருக்கிறது. எனவே, உயர் கல்வி படித்த மருத்துவர்களுக்குப் பதிலாக, M.B.B.S. படித்த மருத்துவர்களாவது அங்கே வந்து நிரந்தரமாகப் பணியாற்றக்கூடிய வகையில் ஏற்பாடு செய்து தரவேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, மக்கள் நல்வாழ்வுத் துறையிலே மருத்துவர்களுடைய பணி நியமனத்தைப் பொறுத்தவரையில், M.S.R.B. மூலமாக அவர்கள் நியமிக்கப்பட்டு, அவர்களுடைய பணி மாறுதல் என்பது counselling மூலமாக நடைபெற்று வருகிறது. குறிப்பாக, அவர்கள் M.B.B.S. படித்த மருத்துவர்கள். அவர்களுடைய மேற்படிப்புக்கு அவர்களுக்கு இடம் கிடைக்கின்றபொழுது, அந்த இடத்திலிருந்து அவர்களுடைய மேற்படிப்பிற்காகக் கல்லூரிக்குச் செல்லக்கூடிய நிலையில், அங்கே இதுபோன்று காலிப் பணியிடம் ஏற்படுகின்றது. இப்படி ஏற்படுகின்ற காலிப் பணியிடங்களையும் நிரப்புவதற்கு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த மாவட்டம் அல்லது நாகப்பட்டினம், ஊட்டி, வால்பாறை போன்ற மலைப் பகுதிகள், இராமநாதபுரம் போன்ற கடைக்கோடிப் பகுதிகளிலே, கிராமப்புறங்களிலே மருத்துவர்கள் பணியாற்றுவதற்கு உரிய சூழலை, மாண்புமிகு அம்மா அவர்கள் எப்படி ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்றால், M.B.B.S. படித்த மருத்துவர்கள் தாங்கள் பணியாற்றுவதற்கு இதுபோன்ற இடங்களைத் தேர்வு செய்தால், அவர்களுடைய மேற்படிப்பில் அவர்களுக்குத் தனியாக, கூடுதலாக இரண்டு மதிப்பெண்களை ஊக்கமாக அளித்து வருகிறார்கள். எனவே, கிராமப்புறங்களிலே அல்லது இதுபோன்ற கடைக்கோடிப் பகுதிகளிலே, மருத்துவச் சேவை தேவைப்படுகின்ற இடங்களிலே அவர்கள் தங்குவதற்கு உரிய வாய்ப்பையும், சிறப்புச் சலுகையையும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அளித்து வருகிறது. ஆகவே, அந்த அடிப்படையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தப் பகுதியிலே கூடுதல் மருத்துவர்களை நியமிப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)*

[**குறிப்பு :** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடுகள்)*

டாக்டர் க. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

திரு. நா. இராமகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*